
அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.



# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண் : 37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை



**அறிவிப்புகள் 2023-2024**

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

## 1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபான விற்பனையில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களின் மறுவாழ்வுக்கு நிதி வழங்குதல்.

கள்ளச்சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் மற்றும் அதன் மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலுமாகக் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாகக் கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற மதுவிலக்குக் குற்றங்களுக்கு சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி மனம் திருந்தியவர்களின் மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவிடுவதற்காகவும் ரூ.5.00 கோடி மறுவாழ்வு நிதி மானியமாக வழங்கப்படும்.

## 2. மது அருந்துதலுக்கு அடிமையாகாமல் இருக்கவும் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் போதை மருந்துகளை தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.

மது அருந்துதலுக்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், மது அருந்துதலுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளவும் மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப் பற்றி விழிப்புணர்வுப் பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துவதற்கும் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

மது அருந்துதலுக்கு எதிரான விழப்புணர்வுப் பிரச்சாரத்துடன் போதை மருந்துகளை தவறான பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தையும் இணைந்து மேற்கொள்ள ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 3. இரகசிய தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்குதல்.

ஒவ்வொரு ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம், பிற மாநிலங்களில் இருந்து மதுபானம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து தகவல்கள் தரும் உளவாளிகளுக்கு பண வெகுமதி வழங்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம் தொகையினை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. 2023-2024-ஆம் நிதி ஆண்டில் இரகசிய தகவல் தரும் உளவாளிகளுக்கு வழங்கப்படும் வெகுமதித் தொகையை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

## 4. எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்படும் மதுபான பாட்டில்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத்தொகை வழங்குதல்.

ஒவ்வொரு ஆண்டும் எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து கடத்தப்படும் மதுபானப் பாட்டில்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் மாவட்ட, நகர சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஊக்கத்தொகை வழங்குவதற்கு ரூ. 15 இலட்சம் தொகையினை அரசு ஒதுக்கீடு செய்கிறது. 2023-2024-ஆம் நிதி ஆண்டில் காவல் ஆளிநர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகையை ரூ. 15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.



## 5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 6,648 மேற்பார்வையாளர்கள், 14,794 விற்பனையாளர்கள் மற்றும் 2,876 உதவி விற்பனையாளர்கள் ஆக மொத்தம், 24,318 மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்கள் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். தற்போது வழங்கப்பட்டு வரும் தொகுப்பூதியத்தினை மேற்பார்வையாளர்களுக்கு ரூ.1,100/-ம், விற்பனையாளர்களுக்கு ரூ.930/-ம், மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு ரூ.840/-ம் மாதந்தோறும் கூடுதலாக உயர்த்தி 01.04.2023 முதல் வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.31.57 கோடி கூடுதல் செலவாகும்.

## 6. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் கண்காணிப்பு கேமராக்கள் (IP CCTV Cameras) பொருத்துதல்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மார்ச் 2023 அன்றுள்ளபடி 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் சமூக விரோதிகளால் பாதிப்பிற்குள்ளாகும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளைக் கண்காணித்திடவும் கடைகளுக்கு வருகை தரும் நபர்கள் மற்றும் தவறான நோக்கத்தில் வரும் நபர்களை அடையாளங்கண்டு தவறுகளை தடுத்திட இந்த நிதியாண்டில் 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் ரூ.16.00 கோடி செலவில் பொருத்தப்படும்.



## 7. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைப் பணியாளர்கள் மற்றும் இதர அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப நல நிதி (குழுக் காப்பீட்டுத் திட்டம்) உதவித் தொகையை ரூ. 3.00 இலட்சத்தில் இருந்து ரூ. 5.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தொகுப்பூதிய முறையில் பணியாற்றி வரும் மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் பணியில் இருக்கும் போது மரணம் அடைந்தால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப நல நிதி ரூ. 3 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக 01.04.2023 முதல் உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.7.38 கோடி செலவாகும்.

## 8. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் (Cash Safe Boxes) நிறுவுதல்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் மார்ச் 2023 அன்றுள்ளபடி 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் கிராமம் மற்றும் நகர பஞ்சாயத்துப் பகுதிகளில் அமைந்துள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் பாதுகாப்பு நடவடிக்கையாக இந்த நிதியாண்டில் 1,000 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் ரூ. 10.03 கோடி செலவில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் (Cash Safe Boxes) நிறுவப்படும்.



## 9. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் 31.03.2023 அன்றுள்ளபடி 5,329 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் தகுதியான 500 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் கண்டறியப்பட்டு மூடப்படும்.

**V செந்தில்பாலாஜி**
மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்